DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 7 | நாள் | : | 25.04.2025 |
| பெயர் | : | தேவராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவிகுளத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். குருவிகுளம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அய்யனார் கோவிலுக்கு மைக் செட் போடுவதற்கு அனுமதிகோரி குருவிகுளம் காவல் நிலையத்திற்கு நான் சென்றிருந்தபோது காவல் நிலையத்தில் இருந்தவர்கள் என்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள். நானும் அதில் கையொப்பம் செய்தேன். பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் காணப்படும் கையொப்பம் அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆகும். சாட்சி மாரியப்பன் என்பவரைத் தெரியும். வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் 11.08.2021 அன்று இரவு 8.30 மணிக்கு குருவிகுளம் அஹ்ரஹாரம் தெருவில் மீனாட்சியம்மன்கோவில் வடபுறம் பாண்டியராஜன் வீட்டின் முன்பு சிமெண்ட் ரோட்டில் உடைந்த கார் கண்ணாடி துண்டுகள் இரத்தக்கறை படிந்த இடத்தை போலீசார் பார்வையிட்டார்கள் என்றும் வரைபடமும் தயாரித்தார்கள் என்றும், அப்போது தயாரித்த பார்வை மகசரில் நானும் மாரியப்பனும் கையொப்பம் செய்தோம் என்றும், கண்ணாடித்துண்டுகளை ஆய்வாளர் கைப்பற்றிய போது நானும், மாரியப்பனும், அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தெரியாது. எனக்கு ஆஜர் எதிரிகளை நன்கு தெரியும் என்றும் அவர்கள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.25 17:28:58 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 6 | நாள் | : | 25.04.2025 |
| பெயர் | : | கல்யாணசுந்தரம் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி காவலர் பயிற்சி பள்ளியில் உதவி சட்டப்போதகராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 11.08.2021 ம் தேதி நான் குருவிகுளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 17.50 மணிக்கு கே.புதூர் ஊரில் ரோந்து பணியிலிருந்தபோது குருவிகுளம் காவல் நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் புறப்பட்டு குருவிகுளம் மீனாட்சியம்மன்கோவில் வடக்கு தெருவில் சென்று பார்த்தபோது அங்கு மலைப்பட்டி கீழத்தெரு கருப்பசாமி மகன் லெட்சுமணத்துரை என்பவர் வெட்டுக்காயத்துடன் உயிருக்கு போராடிய நிலையில் கிடந்தார். அப்போது அங்கு வந்த குருவிகுளம் காவல்நிலைய தலைமைக்காவலர் திரு.செந்தில்குமார்

என்பவர் உதவியுடன் அங்கு நின்ற லட்சுமணத்துரையின் அண்ணன் இரத்தினராஜ் என்பவரது மூலம் காயப்பட்ட லட்சுமணத்துரையை எதிரிகள் விட்டுச் சென்ற TN76 D0079 என்ற இண்டிகா காரில் ஏற்றி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் தலைமைக்காவலர் செந்தில் குமார் காரை ஓட்டினார். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து உடனிருந்த இரத்தினராஜ் என்பவரிடம் நடந்த சம்பவம் குறித்து 18.40 மணிக்கு ஒரு வாக்குமூலம் பெற்றேன். பின்னர் லட்சுமணத்துரையின் தகவலுடன் நிலையம் 19.45 மணிக்கு வந்து இரத்தினராஜின் வாக்குமூலத்தின் அடிப்படையில் குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 வழக்கின் பிரிவு 294(பி), 307 இதச வின் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். அசல் முதல் தகவலறிக்கையையும், இரத்தினராஜின் வாக்குமூலத்தையும், லட்சுமணத்துரையின் தகவலையும் இணைத்து நீதித்துறை நடுவர் சங்கரன்கோவில் அவர்களுக்கு அனுப்பி இதர நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். விசாரணை நகலை குருவிகுளம் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு தகவல் கூறிவிட்டு நிலையத்தில் விசாரணைக்கு வைத்திருந்தேன். காயம்பட்ட லட்சுமணத்துரையை ஏற்றிச் சென்ற எதிரிகளின் காரை நிலையத்தில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தபோது 12.08.2021 அன்று ஆஜர் செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை மனுவின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.</u>

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.204/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 5 | நாள் | : | 25.04.2025 |
| பெயர் | : | சபர்ணா | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of April 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

சிறுமி சாட்சியம் என்பதால் மாலையில் தனிமையில் விசாரிக்கப்பட்டது

கேள்வி-பெயர் என்ன?

பதில் - சபர்ணா

கேள்வி- தற்போது எங்கு தங்கியிருக்கிறீர்கள்?

பதில் - நான் திருநெல்வேலி ஹாஸ்டலில் தங்கி புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படித்து வருகிறேன்.

கேள்வி - எத்தனாவது படிக்கிறீர்கள்?

பதில் - 7 ம் வகுப்பு படிக்கிறேன்.

கேள்வி - இது எந்த ஊர்?

பதில் - தென்காசி

கேள்வி - உங்கள் ஊர் எந்த ஊர்?

பதில்- சங்கரன்கோவில்

கேள்வி - இதுக்கு முன்னாடி சங்கரன்கோவிலில் எந்த தெருவில் இருந்தீர்கள் எங்கு படித்தீர்கள்?

பதில்- காந்திநகர் புதுத் தெருவில் வசித்து வந்தோம்

கேள்வி -இது என்ன இடம்?

பதில்- கோர்ட்

சாட்சியிடம் அவர் குழந்தை சாட்சி என்பதால் அவர் கேள்விக்கு புரிந்து பதிலளிக்காரா என்பதை உறுதி செய்துகொள்ளவும், தன்னிச்சையாக சாட்சியமளிக்கிறாரா என்பதற்காகவும் மேலும் சில கேள்விகள் கேட்கப்பட்டு உறுதி செய்து கொள்ளப்பட்டது. குழந்தை சாட்சியளிக்க தகுதியானவர் என்பதை உறுதி செய்து கொண்டு அவரது சாட்சியம் பதிவு செய்து கொள்ளப்படுகிறது.

என் அம்மா பெயர் தனலட்சுமி, என் அப்பா பெயர் லெட்சுமண துரை, என் அம்மா இறந்துபோனார். என் அப்பாவும் இறந்து போனார். என் அம்மா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தபோதே இறந்துபோனார். என் அப்பா மில்லில் வாகன ஓட்டுநராக இராஜபாளையத்தில் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரிகளில் அண்ணனும் தம்பியும் என் அப்பாவை குருவிகுளத்தில்

வைத்து வெட்டிவிட்டார்கள். நான் எப்போதும் என் அப்பாவுடன்தான் இருப்பேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இது நடந்தது. நானும் என் அப்பாவும் மலைப்பட்டியில் உள்ள என் பெரியப்பா இரத்தினராஜ் வீட்டில் இருந்தோம். என் அப்பா லவ் பண்ணின பெண் பெயர் தெய்வானை. நாங்கள் மாலை 5.30 மணிக்கு குருவிகுளத்தில் உள்ள கோவில் கொடைக்கு ஆட்டோவில் போனோம். அந்த ஆட்டோ நாகராஜிற்கு சொந்தமானது அவரை நான் மாமா என்று அழைப்பேன். நானும், அப்பாவும், தெய்வானையும் போனோம். நாங்கள் போய்க்கொண்டிருந்தபோதே என் தம்பி பார்த்துவிட்டான் என்று சொன்னார். தெய்வானையின் தம்பி ஆட்டோவின் பின்னால் வந்து கொண்டிருந்தார் காரில் வந்து கொண்டிருந்தார். ஆட்டோவிற்கு முன்னால் வந்து மறைத்து என் அப்பாவை வெளியில் வரச்சொன்னார். என் அப்பாவை வெட்டி கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். என் அப்பா கையாள் முன்னால் கொண்டு சென்றதாக சாட்சி கையை நீட்டினார். சுண்டு விரல் மோதிர விரலை காட்டி வெட்டுப்பட்டது என்று கூறினார். அவரது வலது கை முழுவதுமாக போய்விட்டது. என்னை ஏதும் செய்துவிடக்கூடாது என்று என் அப்பா என்னை நோக்கி வந்தபோது என் அப்பாவின் காலில் வெட்டினார்கள். மற்றொருவர் டிரைவர் ஆவார். அவர் அவனை வெட்டாமல் விடக்கூடாது என்று சொன்னார். என் அப்பா எனக்கு ஒன்னுமில்லை என்று கூறிக்கொண்டிருந்தார். என் பெரியப்பா அங்கு வந்தார். என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். என் அப்பா எங்கு போனார் என்று தெரியாது. என்

அப்பா இறந்து போனதாக என் பெரியப்பா சொன்னார். போலீசார் என் அப்பா பற்றி என்னிடம் எதுவும் கேட்கவில்லை.

**குறுக்குவிசாரணை மனுவின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.25 17:29:14 +0530